சொல்வாரானால், அரசுக்கு பொது மக்கள் புகார் தெ வித்தால், நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றதைத் தங்கள் மூலம் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

89—(*வினா எண். 9674)—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவு படுத்த திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ & ஆ) தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். அம்பாசமுத்திரத்தைச் சுற்றிப் பல நூற்றுக் கணக்கான கிராமங்களும் நகரங்களும் இருக்கின்றன. தற்சமயம் அங்கே உள்ள தாலுகா மருத்துவமனை மிகவும் பழமையானது, நூற்றாண்டுக்கு முற்பட்டது. அங்கே நவீன அறுவை கிசிச்சை செய்யக்கூடிய கருவிகளும் இல்லை. சிறந்த கட்டிட வசதிகளும் இல்லை என்ற காரணத்தினால் அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த உடனடியாக மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள தகவல்படி அந்த மருத்துவ மனையிலே அறுவைசிகிச்சை குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்படுவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதை எழுதித் தருவார்களானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போதுமான கட்டிடங்கள் இல்லை. அதற்குக் கட்டிடங்கள் வேண்டிய அளவுக்குக் கட்டுவதற்கு பக்கத்திலே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம : அதுபற்றிய விவரங்களை எழுதித் தருவார்களானால் அரசு பரிசீலிக்கும்.